9.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

6 MAR 1923

குன்றை நகர்ச்

சுப்பிரமணிய சுவாமி மீது

ஆனந்தக்களிப்பு, எச்சரிக்கை, கட்டியம், வாரப்பதிகம், மாதப்பதிகம், பதிகம்.

இவை
அருப்புக்கோட்டை
சங்கீத சாஹித்ய வித்துவான்

K.VR. தருமலிங்கஞ் செட்டியாரவர்கள்

இயற்றி

தேவகோட்டை
வித்துவான் சொ. வேலுச்சாமிக்கவிராயரவர்கள்
பார்வையிட்டு
ஷையூர் அ. தி. அ.
இராமநாதச்செட்டியாரவர்களால்

தேவகோட்டை
வைசியமித்திரன் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றன.

1923.

உ

சிவமயம்.

குன்றை நகர்ச்

சுப்பிரமணிய சுவாமிமீது

ஆனந்தக்களிப்பு.

சீராரு மயின்மலையில் வேலன்—மீதிற்
சிறப்பான ஆனந்தக் களிப்பதனைப்பாட
ஏராரும் ஆனைமுகத் தைங்கை—திகழும்
எந்தையிரு பொற்பாத மெந்நாளுந்துணையே.

முத்தர்துதி ரத்தினவேல் முருகன்—மகிழ
முதன்மைபெறு மானந்தக் களிப்பைநான் பகர
அத்தியுரி போர்த்தசொக் கேசன்—பாதம்
அநுதினமு மெனதிதய மதனில் நினைவேனே.

வெற்றிமயில் வேல்முருகன் மீது—நல்ல
விருப்பமுடன் ஆனந்தக் களிப்பைநான் சொல்லச்
சித்தர்திகழ் கூடல்நகர் வாழும்—எங்கள்
தேவிமீனாக்ஷி யிருபாத மலர்துணையே.

வள்ளிதெய் வானையிரு பாகன்—மீது
வளமான ஆனந்தக் களிப்பைநான் ஓதப்
புள்ளிமயி லவன்பாதம் நாளும்—எனது
புந்திமகிழ் வாகநிதஞ் சிந்தனை செய்வேனே.

பேரோங்கு குன்றைநகர் முருகன்—மீது
பெருமைபெறும் ஆனந்தக் களிப்பைநான் கூறப்

பாரெங்கு கலைகளின் றிருநாடும்—காடல
பாரதிசெயன் குவிலிருந் தருள்புரிவன் நாளும்.
தாரணியு ளோர்போற்றும் நீதன்—பண்டு
சங்கரன் றன்செவியி லோதுகுருநாதன்
சூரசங் காரனெனுந் தீரன்—வானச்
சுரர்களுக் கெந்நாளு மதிகவுபகாரன்
நவவீரர் தந்தலைவ னானோன்—தன்னை
நாடிவரு வோர்களுக் கருள்செயும் விநோதன்.
தவமுனிவர் நற்றொழில் வளர்ப்போன்—குன்றைச்
சண்முகன் மீதினிலான் ஆனந்தக் களிப்பைக்
கற்றபுல வோர்களு முவரைத்தல்—சீதக்
கஞ்சமலர்க் கிளைபாம்பல் பூத்திடுதனிகர்க்கும்
வெற்றிமயில் முன்புவான் கோழி—சிறகை
விரித்துநின் றெதிராக விளைபாடல் போலும்.
ஆனைநடை கண்டுபீ ராமை—கரையில்
அன்றிவே நடப்பமெனுங் கருத்தினது நேர்மை
வானில்வரும் இரவியொளி கண்டு—முன்பு
வந்தொளிசெப் மின்மினியின் வண்ணநிக ருண்டு.
குறுமுனி தனக்குரு பதேசா—அடியர்
கொண்டாடு மயின்மலையில் வாழு முருகேசா
அருணகிரி மீதுவிசு வாசா—என்னை
ஆண்டருள வேண்டுமயி லேறுசர் வேசா
நிராதக கலிதீர்க்கும் நேதா—அறியாச்
சிறியேற்கு மனமிரங்கி வாசாமி நாதா
வாராம விருப்பதென்ன கந்தா—லோக
மாதுமீனம்பிகையின் மடியிருந்த மைந்தா
வாவென்று னக்குவரு தொல்லையா—ஏழை
வருத்தமதைத் தீர்த்திட உனக்கென்ன தொலையா

சரவணத் தாறுருவமாகி—வந்த
சண்முகா உன்றனைப் போலுண்டோ யோகி
அப்பாவென் னரசே நீ வருவாய்—இந்த
அடிமைக்கு மனமுவந் தானந்தந் தருவாய்
முப்போதும் அமரர்துதி மெய்யா—ஞான
முத்துக் குமாரனென வந்தவென்னையா.
மறையோனை யோங்கியே குட்டிச்—சிறையில்
வைத்தவா இத்தருணம் அடியேனைக்கிட்டி
இறையேயென் முறையதனைக் கேட்டு—உற்ற
இடரொன்றும் அணுகாமலகலவே யோட்டு
தாய்தந்தை தெய்வ நீ முருகா—உன்னைத்
தவிரவே றேதுகெதி சாற்றுமால் மருகா
நீ பூசை யேற்றருள உகந்தே—விரைவில்
நீலமயில் மீதுவா தேவர்கள் விருந்தே
வள்ளிக்கு வாய்த்தமண வாளா—கடப்ப
மாலையணி யெழில் சேர்ந்த பனிரண்டு தோளா
அள்ளிநீ றளித்துவினை தீர்க்கு—முரு
கையனென் றுலகத்தில் தெரியுமே யார்க்கும்
கள்ளவிழ் பூங்குழல் தெய்வானை—தழுவு
கருணை கராவின்று காக்கவெளியேனை
வள்ளலரன் றனக்குரிய பாலா—இன்னும்
வன்கண்மை சாதிக்கலாமோ சுசீலா
வேதநீ ரெதிரேற விட்டே—சமணர்
வீரத்தைப் போக்கியே கழுவதனிலிட்டே
பூதலம் புகழ்கூடன் மேவும்—அந்தப்
பூபாலனடைந்திட்ட துயரங்கள் யாவும்
தீர்த்தவா தென்பரங் கிரிபாய் —அன்பர்
சிந்தை மிசை குடிகொண்டு நாளுமருள் புரிவாய்

கார்த்திகேயா கருணைவாரி—நானும்
கடைத்தேறும் வழிபதனைக் காட்டன்பு மீறி
பிறவாதிருக்கவருள் கோனே—அன்று
பேசாத ஊமையைப் பேசவைத்தோனே
இறவாத நெறியறிவித்தோனே—பன்பர்
இடுக்கத்தைக் கெடுக்கவே லெடுத்த சிமானே
எட்டெட்டு நாலைந்து லெக்ஷம்—பிறவி
யினைக்கடந்திச் சென்மங் கிடைத்ததுன் பக்ஷம்
கிட்டியதுன் றற்கிடைத்த பாக்யம்—என்னைக்
கிருதார்த்த னாக்கிவைப்பது வெகு சிலாக்யம்
ஆண்பனையைப் பெண்பனைசெய்தோனே—வெந்த
அஸ்திதனைப் பெண்ணாக்கித்தந்த எம்மானே
காண்பதாருன்னுடைய அருமை—எட்டுக்
கரிசூழ்ந்த வுலகெலாம் புகலுமுன் பெருமை
கனைவாரி வேல்விட்ட கந்தா—மிக்க
கலைதேர்ந்த அருணகிரிக் கருள்புரியுமைந்தா
எனைக்காக்க மனமிரங்க விலையா—அந்த
எழிலாரு மலையைவிட் டிங்குவரத் தொலையா
திருமருகல் தன்னில் விடந் தீண்டி—யிறந்த
சிறுவனுக் குயிர்தந்த திவ்யமலையாண்டி
மருமலி பரங்கிரியில் வந்தாய்—அன்று
மகபதியின் மகள்மணஞ் செய்துமகிழ்ந்தாய்
கண்டகண்ட தெய்வங்கள் வணங்கேன்—உன்றன்
கமலமலரடிதொழார் தங்களுடனிணங்கேன்
அண்டங்கள் தந்தருளு நாதா—அன்பர்
அநுதினமு நினைமனந் தனில்வரும் பாதா
ஆவலுடன் உன்மலையை நாடி—மிகவும்
அன்போடு ஆனந்தக் களிப்புதனைப்பாடிக்

காவடிகள் கோடாநுகோடி—மௌனங்
கர்ச்சிக்க விளையாடி யுன்னையே தேடி
வருகின்ற பெருமையே பெருமை—பார்த்த
மனிதருக் கெந்நாளுங் கிடையாது வறுமை
தருசேவல் பால் புழுகு பனிநீர்—மச்சம்
சர்க்கரையுந் தண்ணீருங் கழுநீரு மிளநீர்
அக்கினியின் மேல் நடந்து செல்லல்—ரதத்தை
அரைச்சலாகையிற் கோத்து இழுத்துடனேசெல்லல்
மெத்து சரீரத்தின்வேல் குத்தல்—அதனில்
விதமான பாற்செம்பு பழமாட்டி வைத்தல்
அப்பனே யுன்பெருமை வண்ணம்—எந்த
ஆலயந் தன்னிலுங் கிடையாது திண்ணம்
அற்புதக் காவடிக ளெடுத்து—வரும்
அலங்காரம் பார்க்கவே ஜனம் பின்னால் அடுத்து
ஓடிவருகின்ற தென்னகூட்டம்—இந்த
உலகத்தி லுன்பெருமையே மிகக் கொண்டாட்டம்
ஆடிவரு காவடியின் வகையை—என்னால்
அளவிடற்காகுமோ அதனுடைய தொகையை
திகழ்தேவ கோட்டை நகர் வாழும்—வணிகச்
சிமான்கள் காவடியின் பெருமைசொல நாளும்
நிகழகத்திய முனியுங்குறியன்—ஆகி
நின்றிடுவ னென்னில்யான் சொல்வதென் சிறியன்
கற்பகந் தனக்குநிகர் நகரம்—காணும்
கவிவாணர் யாவரும் புகழ்கின்ற நகரம்
சிற்பர்களும் அதிசயிக்குந் தொழில்கள்—சேர்ந்து
திகழ்கின்ற மாளிகைகள் புகழ்கின்ற எழில்கள்
வானளவு மாடநிறை நகரம்—உயர்ந்த
மாணிக்க முதல்மணிகள் வைத்திழைத்த நகரம்

ஆனசிவபணியு நகரத்—தாரும்
அழகான தருமங்கள் பலபுரியும் நகரம்
மன்னுபுகழ் இந்நகரில் வாழும்—ரத்ன
மகுடதன வைசியர்கள் பத்தியுடனாரும்
பன்னிருகை முருகனருள் போற்றி—எடுக்கும்
பாங்கான காவடியின் பெருமை வெகுநேர்த்தி
முதனாளில் விரதமிருப்பார்கள்—குன்றை
முருகனடி யிணைமலரை மனதில் நினைப்பார்கள்
கதிரேசன் காவடியெடுத்து—அழகாய்க்
கனமான மயிற்றோகை யிருபாலும் வைத்து
பட்டினாற் பன்னாங்கு போர்த்தி—உள்ளே
பளபளெனக் குஞ்சங்கள் வரிசையாய்த் தூக்கி
இட்டமுடன் மாற்றுயர் செம்பொன்னில்—இயற்றும்
எழிலான நகரத்தார் பள்ளிக்கூடந்தன்னில்
காவடிகள் கொண்டுவந்து வைத்து—வெள்ளிக்
கவின்பெற்ற செம்புகளிற் சர்க்கரை நிறைத்து
ஆவலுடன் நீற்று முத்திரைகள்—சேர்த்து
அழகான உறியுடன் கட்டியே விரைவாய்
மற்றைநாள் அதிகாலை ஸ்நானம்—செய்து
வகையான பட்டுடைக ளணிந்து மெய்ஞ்ஞானம்
உற்றதிரு நீறுமெய் துலங்க—மேன்மை
உருத்ராக்ஷ கண்டிகையு மார்பினிலிலங்க
ஆணிப்பொன் னுருக்கிக் கூட்டிச்—சிற்பத்
தரியதொழில் பலவகையுங் கண்காணக்காட்டி
மாணிக்கம் வைரங்கள் பதித்து—விலைகள்
மதிக்கமுடியாதவணி யன்புடன்றரித்து
நிரைநிரையாய் வாத்தியங்க ளொலிக்க—அங்கே
நினைத்தளவில் முருகன்றனருள் பிரதிபலிக்க

கரையிலாப் பழங்களுடன் தேங்காய்—வைத்துக்
கர்ப்பூரங் காட்டியே மகிழ்ந்து வெகுபாங்காய்
ஒருமனமாய்ச் சிந்தித்து நின்று—குகனை
உவகையுட னரகரா வேலுமயிலென்று
சரவணபவாவென்று விண்டு—அன்பிற்
றமது காவடிதனைத் தோளின்மேற்கொண்டு
மிகுமாரியம்மனது தளிமுன்—சென்று
வேல்முருக னடிமலர்கள் போற்றியே யதன்பின்
அகமகிழ முருகன்மேற் பாடி—யங்கே
யாடிவருங் காவடிகள் குன்றைநகர் நாடி
நெற்றிநயனத்தனருள் நாளும்—வேண்டி
நீணிலந்தன்னிலெங் நாளுமே வாழும்
சித்தவயிராக்ய மிகுதீரன்—வணிகர்
திண்ணப்ப செட்டியா ரென்னுங்குபேரன்
தருமமே யுருவாக வுற்ருேன்—மிக்க
சாதுக்கள் யாவர்க்கு மிகவன்பு பெற்ருேன்
அருமையாய்ச் செய்துவைத்த கோயில்—இந்த
அலங்காரம் போற்கண்ட தில்லையித்தீவில்
உருவங்கள் செய்திருக்கும் நேர்த்தி—அவற்றை
யுற்றுப்பார்த்தோர்கள் மனம் எப்போதும் பூர்த்தி
பெருமையுடன் அக்கோவில் நாளும்—ஊர்க்குப்
பிரதான மூர்த்தியாய் அமர்ந்திருந்து வாழும்
ஆதி கைலாச கணநாதன்—என்று
அமைந்திடும் பெயர்பெற்ற அற்புதவிநோதன்
சோதிமயமான தளிநாடி—எங்கள்
துயர்நீக்குவாயென்று துதித்துக்கொண்டாடி
விரைவினுடன் திண்ணப்பசெட்டி—யார்முன்
வெட்டிவைத்த வூருணியின் தென்பாலிற்கிட்டி

வருகின்ற காவடிகள் காண—அன்பாய்
வருவோரைப் பார்ப்பவரு முருகனடிபேண
மிக்கபுகழ் நகரத்தார்கூடி—நிதியை
மேன்மையாய்ச் சேர்த்துமன மொன்றாக நாடிப்
பக்குவமதாய்ச் செய்துவைத்தே—உயர்ந்த
பைம்பொன்னின் சிகரங்கள் நன்றாயமைத்தே
இருக்கின்ற சொக்கேசர்தளியில்—சென்று
ஏகமாய் விளைபாடுங் காவடிகள் வெளியில்
உருக்கமாய் முருகன்மேற்பாடி—யாரும்
ஓம் அரகராவென்று நின்று விளையாடி
ஆனந்த மென்மேலும் பொங்க—மனதில்
ஆறுமுகன் காவடியுந் தோளின்மிசைதங்க
ஓம் நமசிவாய வென் றுரைத்துச்—சீலம்
ஓங்குகுரு நாதனடி மனசிற்றரித்து
திருமேவுங் குன்றைநகர் சேரும்—ஞான
சிவசுப்ரமண்யனைப் போற்றவினை தீரும்
விரைவாக வாருங்கள் செல்வோம்—அந்த
வேலனடி போற்றிநமன் வாதைதனைவெல்வோம்
வாருங்கள் வாருங்கள் ஓடி—அந்த
மயில்வாகனன் பாதவிருப்ப மிகநீடி
நாருமலர் போலமன மொன்றாய்—வைத்து
நவரத்ன வேலனைப் போற்றுவோம் நன்றாய்
சடையாத பத்தியுடன் வாரும்—என்று
சாற்றியே வேகமாய் நடந்தார்கள் யாரும்
விடையேறி யீசனருள் சேரும்—அன்பன்
வெள்ளையனூருணியின் கீழ்பாலினேரம்
கலங்காத கண்டகண நாதன்—யார்க்கும்
கருணைபொழி மெய்ஞ்ஞானக் கடவுளொனுநீதன்

தலமொம்வந்துதொழு பதத்தன்—மனசிற்

றரிப்பவர்க்கப் பொழுதே யருள்புரியிதத்தன்

கவனமுட னவனடிகள் போற்றிச்—சிந்தை

களிப்புற்றுர் வழிவந்த சிரமத்தை மாற்றி

உவகையுடன்செல்லுவோ முந்து—மென்றவ்

வூருணியின்றென்கரையின் வழியாக வந்து

மங்களகல்யாண குணநீதன்—உலகில்

வாழ்கின்றசீவர்களை ரக்ஷிக்கும் நாதன்

பொங்குதென்கலைப்பெருமாள் கோயில்—முன்பு

போகின்ற வழியாகச் சென்றுரவாவில்

அடல்வீறுமசுரர்களை முன்னம்—சமரில்

அடி யோடு வேரறவறுத்தவிற்பன்னன்

வடகலைப்பெருமாள்தன்றளியே—செல்லு

மார்க்கமாய் ஊருணியின் வடகரையின் வழியே

திடமாகவேலன் முத்திரையைத்—தூக்கிச்

செல்கின்ற பேர்தமைச் சொல்வதெத்தொகையை

வடிவேலன் காவடிகள் போகும்—துரிதம்

வாயுவேகத் தொடுமனோவேகமாகும்

அடியவருக் கெளியகுகன்பெருமை—இரண்

டாயிர நாவுடையோன் சொல்லுவது மருமை

துடிமான் கரத்தனருள்பாலன்—வணங்கித்

தொண்டுசெய்வோர்க் கெந்த நாளுமனுகூலன்

காவடிகளெல்லாமுங் கூடி—வந்து

கருதாவூருணிக்கரை கீழ்பாகம் நாடி

ஆவலுடனின்று விளையாடி—முருகன்

ஆறுமுகன் சேவடியி லன்புமிகநீடி

கருதுவா மளித்தருள்வாய் வந்து—என்று

காவடிகளிறக்கிவைத்தெடுத்து மனமுவந்து

விரைவினுடன் சத்திரம் புதூரின்—பாதை
விளையாடிச் செல்லுதலற் புதமிகவுந்தேரின்
தெண்டிரையின் மிக்கபுகழ் சேரும்—கண்ட
தேவியெனு மங்கராஞ் சென்றூர்கள்யாரும்
வண்டுகள் மதுவதனை யுண்ணும்—கமல
வளமான ஆருணி விசாலமாய் நண்ணும்
கொண்டேதே ரடிக்கறுப்பருண்டு—அவர்தம்
குறைவிலாமகிமையை யார்சொல்வார்விண்டு
அண்டருலக துவரையுஞ் சோலை—சூழ்ந்து
அழகாக மலர்கின்ற சோபையே காலை
அண்டினர்கள் ஜன்மவினை தீர்க்கும்—நகரம்
அதன்வளப்ப மெல்லாமுஞ் சொலமுடியாதார்க்கும்
துண்டவெண் பிறைசூடியென்றே—கூறுஞ்
சொர்னமூர்த்தி யினுடைய கோயிலின்முனின்றே
சென்னிமிசை யிருகரமுந்தூக்கி—அவரைத்
தெரிசித்துச் சென்றூர்கள் குன்றைநகர் நோக்கி
கன்னலுடன் செந்நெல்விளைவயல்கள்—நீண்ட
கமுகமரமாமரங்கள் பலவுமேயயல்கள்
தென்னமர இளநீர்கள்கண்டு—வானிற்
றேவர்களுந்தீர் வார்கள்தாகங் கைக்கொண்டு
அன்னமுறை கமலங்களருகு—திகழும்
அழகான பலவகைப் பக்ஷிகளின் குருகு
இந்தவிதவழி வளங்கள் நாளும்—சொல்ல
எண்ணுவோர்க் கெல்லாமும் அடங்காது நீளும்
கந்தனடி காணவானந்தக்—களிப்பைக்
கழறியே வருபவர்கள் வழிகொண்டு முந்த
பல்லுப்பிச்சனூருணிக்கு வந்தார்—அங்கே
பாங்கான காவடிகள் வைத்து மகிழ்ந்தார்

சொல்லுக்கடங்காத வளப்பம்—அதனைச்
சொல்லுவதென் றெண்ணினல் எனக்குமனங்குழப்பம்
ஆசையாற் சொல்கின்றேன் சிறிது—அந்த
ஆழத்தை யளவிடுதல் யாவர்க்கு மரிது
பாசிலைக் கமலமலர் தோறும்—அங்கே
பாங்கானதேன்மணம் பரவியேநாறும்
கெண்டைசேல் வாளைகுதிகொள்ளும்—அருகிற்
கிழிந்துசெங் கழுநீர்கள் மதுவதனை விள்ளும்
எண்டிசையிலுள்ளோரும் வருவார்—நீரில்
இறங்கியே குளித்துமுக மலர்ச்சியாய்த் திரிவார்
நாற்புறமும் விருக்ஷங்கள் சேரும்—இளைத்து
நண்ணினோர் நீர்பருகிற் களைப்பெலாந்தீரும்
பார்ப்போமென் றவ்வளங்கள்கண்டு—யாரும்
பகலவன் கிரணங்களாற் சிரமம்விண்டு
நியமமாய்க் காவடிகள் பூசை—செய்து
நேராக நின்று வேல் மயிலென்னுமோசை
நயமான அண்டமதில் முட்டப்—பார்க்க
நண்ணுபவர் யாவரும் விரைவோடுகிட்ட
தீராத நோய்தீர்க்குந் தீரன்—நல்ல
சித்ரமயிலேறிவரு முத்துக்குமாரன்
வாராருந் தனவள்ளி லோலன்—மிக்க
மதுரரச சங்கீத பிரியநய சீலன்
சீராரு மானந்தக்களிப்பாம்—கவிகள்
செப்பியே யெல்லோருஞ் சிந்தைவெகு செழிப்பாய்
ஆராவயற் பாதைகூடி—அப்பால்
ஆகின்ற காடுகளை யங்கங்கே நாடி
மான்கன்று புலிப்பாலை யுண்ணும்—தங்கும்
வரியரவமயிலோடு பிரியமே நண்ணும்
காண்கின்ற பேர்களுக்குச் சிங்கம்—வெகு
காததூரஞ் செல்லுஞ்செய்யாது பங்கம்

ஆலரசு கொன்றையுமகத்தி—வானை
யளாவிய குருந்து கருவிளையுடனுமத்தி
வேலமரம் அடம்பு பலகொண்டு—பார்ப்போர்
விழிகளுக்கழகான வளமதைக்கண்டு
சரவணபவா வென்றுகூறிக்—கந்தன்
சரணாரவிந்தமலர் மீதன்புமீறி
விரைவோடு கண்மாய்கள்கடந்து—அப்பால்
வெள்ளநிறை தேனாறுதாண்டி வழிதொடர்ந்து
அரவமாம் காளிங்கன் றன்மேல்—அந்நாள்
ஆடியருள் பெருமாளின் அருள்பெருக மென்மேல்
அரியக்குடி மார்க்கமாய்ச் சென்று—பெருமாள்
ஆலயத்தின் முன்னாக விளையாடி நின்று
சின்மய சொரூபகுண நீதன்—மவுன
தேசிகனென் றோதிடும் பெயர்பெற்ற நாதன்
சென்னியோராறுடைய மெய்யன்—திவ்ய
தேசோமயானந்த வாரிதியென்ஐயன்
கூறுமோர் வேலேந்துகையன்—தினமுங்
குக்குடங் கொடியாகக் கொண்ட முருகையன்
நீறுசேர் திருமேனியுடையன்—நீல
நிறமஞ்ஞையேறி வருகாவியங்குடையன்
சித்திபுத்தி மணவாளன் தம்பி—திவ்ய
திருவடியை யெந்நாளும் துணையென்று நம்பி
பத்திபுரிவோர்க்கு நிதியோங்கும்—புத்ர
பாக்கியங்கிடைக்குஞ் செய்பவமெல்லாம் நீங்கும்
கந்தனை நினைக்கிற் பயமேது—எந்தக்
காலத்து நம்மை யமவாதை யணுகாது
சந்தேகம் ஒன்றுமிலை யிதனில்—என்று
சடிதியாய்ச் சென்றார்கள் காரைக்குடியதனில்

மாடமாளிகைகள் மிக நீடிப்—பார்க்கும்
மனிதருக்கழகான கடைகள் பலகோடி
சேடனுஞ் சொல்லவொண்ணுத—சிறப்பிற்
றேவருலகம்போல வளங்கள்பல மோத
நாலு பக்கங்களிலும் வருவார்—அங்கே
நாடோறு மவரவர்கள் காரியங்கள் தெரிவார்
ஏலவே பலவூர்க்கும் ஜனங்கள்—பாதை
யிதில் வந்துகூடியே களிப்பார்கள் மனங்கள்
சீமான்களென்று புகழ்சேரும்—வணிகர்
தினமும்வாழ் அந்நகரில் வந்தவர்கள் யாரும்
கோமான்கணேசனுறை கோவில்—சென்று
குமரேசன் காவடியிறக்கினரவாவில்
சூரியனும் அத்தமன மடைந்தான்—வானிற்
சுடரான சந்திரனும் உதயமதடைந்தான்
சீரான தாரகைகள் எங்கும்—தோன்றிச்
சிறப்பான வானத்தில் ஒளிகளே பொங்கும்
தங்கி யெல்லாரும்நன் ருக—இங்குச்
சண்முகனையே நினைந்திரவி லொன்ருகச்
செங்கதி ருதிக்குமுன்னுக—நாமும்
செல்லுவோம் குன்றைநகர் நாடிவிரைவாக
என்றுரைத் தெல்லோருந் தங்கிக்—கந்தன்
இணையடிகள் நினைந்தார்கள் மனத்தன்பு பொங்கி
அன்றிரவு துயில்கொண்டெழுந்து—குளித்து
அழகான வஸ்திரமு மெய்தனிலணிந்து
தெள்ளொளிய ரத்னவணிதரித்து—முருகன்
திருநாமம் நாவின்கண் அன்புடனுச்சரித்து
பிள்ளையார் கோயில்தனை யடுத்து—யாரும்
பேணியே காவடிகள் பூசைசெய்தெடுத்து

கொப்புடை யம்மன்கோயில் வீதி—அந்தக்
குளத்தின்மேல் கரைமார்க்கம் வேல்மயிலென்ரேதி
எப்போதும் அடியர்விசுவாசன்—சிவன்கை
யிசைகனிக்குமுன் வலம்வந்தகும ரேசன்
காருண்யம் யாவர்க்குங்கொண்டோன்—பண்டு
கைலாசபதிசெவியில் மந்திரம் விண்டோன்
காரிணைமுன் தளையிடுதல் செய்தோன்—அந்தக்
கலசமுனி தனக்குமுன் தமிழ்மழையைப் பெய்தோன்
சுப்பிரமணியனென்று சொன்னால்—சூழ்ந்த
துன்பமென்பது வொன்றும் வாராதுமுன்னால்
அற்புதக் குகன்செயலின் காட்சிக்—கின்னம்
அறிவிக்க வேண்டுமோ பற்பலவுஞ் சாக்ஷி
பாலினபி ஷேகத்தில் யோகன்—தேவர்
பங்கிலுறை துங்கனெனு மங்களவிசாகன்
கோலவரை யெங்குமுறை யீசன்—தினமும்
கொண்டாடும் அன்பர்களைச் சூழ்ந்தபவநாசன்
தூயமுரு கேசன்மேற்பாடிச்—சென்றூர்
சுகமான கோயிலூர்ச் சாலைதனைநாடி
வாயுவின் மந்தசஞ்சாரம்—அங்கே
வருவார்கள் போவார்க்குச் சிரமபரிகாரம்
இருபாலும் தென்னமரம் ஓங்கும்—அதனில்
எழிலான இளநீர்கள் குலைகுலையாய்த் தூங்கும்
எருவும் வேண்டாதுவிளை வயல்கள்—சிறப்புற்
றெங்கெங்கும் நெற்பயிர்கள் ஓங்குவன அயல்கள்
பச்சைப் பசேரென்று இருக்கும்—எங்கே
பார்த்தாலும் கண்ணுக்குக் குளிர்ச்சியே பெருக்கும்
இச்சைப் படத்தக்க பாதை—யிதனி
லின்பமாய்ச் சென்றூர்கள் விண்டார்கள் வாதை

வந்தார்கள் கோயிலூர் தன்னில்—இந்த
மாநிலந் தனிலில்லை யிதற்குநிக ருன்னில்
சிந்தைதுணி வாகவவ் வூரில்—உள்ள
சிறப்பெலா மெடுத்துரைப் பாரிலையிப் பாரில்
கோவிலூ ருள்போகும் மார்க்கம்—முன்பு
கொடிஞ் சிரத நிகர்மாடம் இரண்டருமை பார்க்க
ஆவலுட னுண்பவர்கள் தாகம்—போக்கி
யமிர்தம்போற் சுவையுள்ள குளத்தினீர் பாகம்
நாலுவீ திகளுங்க ண்ணாடி—போல
யாவோரும் பார்ப்பவர்க்குப் பரிசுத்தம் நீடி
சாலும்வே தாந்தமடந் தன்னில்—தலைமைச்
சாமியார் உபதேசஞ் செய்வர்தனை யுன்னில்
அப்பாவி தென்ன ஆச்சரியம்—அந்த
ஆலயந் தனைப்பார்க்கப் பார்க்கவெகு பிரியம்
இப்பாரி லிதற்குநிக ரேது—எங்கள்
ஈசனுறை கைலையை இயம்பலே தோது
அற்புதமி குந்தெப்பக் குளமும்—வேத
ஆரியர்கள் திருவீதி யிருக்கின்ற வளமும்
எப்போதும் வேதநிறை கீதம்—அங்கே
இடைவிடா தொலிக்கின்ற தாகாவி னோதம்
பசியென்று வந்தோர்க்கு அன்னம்—நாளும்
படைக்கின்ற சத்திரத்தில் நடக்காது பின்னம்
நிசிநேரம் ஆனாலும் சாதம்—அங்கே
நீங்காது கொடுப்பார்கள் அதிலில்லை பேதம்
கொற்றவா வீசரங் கிருப்பார்—தம்மைக்
கும்பிடுவார் யாவர்க்கும் வரங்கொடுக்கும் விருப்பார்
வெற்றிநிறை திருநெல்லை யம்மை—அங்கே
வீற்றிருந் தருள்புரிவள் யாவருக்கும் நன்மை
இருவரையும் வணங்கியே நின்று—அவர்கள்
எழிலான திருவருள்கள் பெற்றினிது சென்று

மருவு பாதரக்குடியினடந்தார்—நிழல்சேர்
வளமானஊருணியின் கரைதன்னையடைந்தார்
நீர்நிறைந்த கண்வாயின்பக்கம்—பச்சை
நிறமமைந்த நெற்பயிர்கள் சேர்தருஞ் சொர்க்கம்
ஏர்நிறைந்த சோலைகளும் சூழும்—அதனில்
இசைமதுரகுயில்கிளிகள் பூவைகளும்வாழும்
அந்தணர்கள் வீதிபலசாரும்—அவர்கள்
ஆற்றியிடும் யாகதூ மங்கள்விண்ணேரும்
தந்தம் வருணத்தினிலை நிற்கும்—குடிகள்
சாலவே தழைத்தோங்கி மிகமகிழ்சிறக்கும்
நகரத்தார்க் குபதேசம்புரியும்—சுவாமி
நாள்தோறும் இங்கிருந்து சாஸ்திரங்கள் தெரியும்
சிகரத்தார் திவ்யமடந்திகழும்—அதனிற்
சிறப்பான தவஞ்செய்வார் கூட்டமேகழும்
வேதங்கோஷங்க ளொருபாலில்—உயர்ந்த
மிருதிகளின் முழக்கமுந் திகழுமொருபாலில்
போதமலி காவியமுஞ் சம்பும்—இன்னும்
புகல்கின்ற அலங்கார சாஸ்திரங்கள்பம்பும்
கங்கைநிகர் பரிசுத்த தீர்த்தம்—அந்தக்
கனதைபெறும் ஊருணியின் கரையிலோர் மூர்த்தம்
மங்களமாயிறக்கிக் காவடியை—யாரும்
வைத்திளைப்பாறி யெண்ணி முருகன்றன் அடியை
அரகரா வேலுமயிலென்று—துதிகள்
ஆற்றியே காவடிகள் தோளில்வைத்து நின்று
வருகின்றோ ரெல்லோரும் கண்டார்—குன்றை
மகத்தான கோபுரத்தை யரகராக்கொண்டார்
முருகன்றன் ஆனந்தக் களிப்பை—மிகவு
முழக்கமாய்க்கூறியே கொண்டுமனச் செழிப்பைத்
துரிதமாய்க் குன்றைநகர்வந்து—வேலன்
துணையடிகள் அன்பினுடன் சிரசின்மேல் தந்து

அந்தவூர் மலையடிவாரத்தில்—நகரத்
தார்களுக்குரிய வன்னதான நன்மடத்தில்
வந்துதந்தோளிற் காவடிகள்—இறக்கி
வைத்தார்கள் மனங்கொண்டு முருகனிணையடிகள்
இந்தமாநகர்வளமைமானே—முழுதும்
எவர்சொல்வர் தெரிந்தவரை சிலசொல்வேனனே
இந்திரனும் பூஜைமுன் புரிந்தான் வர்னத்
திரவியங்கந்தனை முன்பதங்கள் தொழுதாய்ந்தான்
கருடனன்பினற் பூசைபுரிந்தான்—தாய்க்குக்
கத்துருவினல்வந்த இழிவினையரிந்தான்
பிரமனுந்தவ ங்கள்செய்துமுன்பு—பொய்மை
பேசுதலின் வருதோஷ நீங்கினன்பின்பு
வசிட்டமுனி புதல்வருக்குக் கொடுத்துச்—சாபம்
வருதோஷ நீக்கினன் கவுசிகனும் அடுத்து
வசிட்டனும் புரிந்தனன் முன்தவத்தை—முருகன்
மலரடியினருள்பெற்று நீக்கினனவத்தை
நாரதனும் புரிந்தனன்முன் பூசை—வள்ளி
நாயகன்அருள்பெற்று நிரம்பினன் ஆசை
பாரதத்துப் பாண்டவருமுன்பு—பூசை
பரிவாக இயற்றியே அடைந்தார்கள் இன்பு
இச்சையுடன் கிருட்டிணன்முன்பூசை—யிதனில்
இயற்றியே சாம்பவனைப்பெற்றனனென்றேசை
அச்சுவத்தமெனும் பெயர்கொள் மரங்கள்—மிகவும்
அடர்ந்திட்டே யனேவோர்க்குஞ்செய்யுஞ்சுபகாரங்கள்
சித்தசனு முற்காலந்தங்கி—இங்குச்
செய்தனன் பூஜைதனை மனத்தன்பு பொங்கி
இத்தலத்து மகிமையெலாம் உரைத்து—நகரத்
தெழிலான வைசியர்கள் அன்புமிகத்தரித்து
அன்றிரவு தங்கியிருந்தியாரும்—மறுநாள்
அதிகாலையே ஸ்நானமுடித்துப் பொற்பாரும்

துன்றுபணி பூண்டாடை யுடுத்துச்—சிவ
சுப்பிரமண்யக்கடவுள் அருட்கவிகள் படித்து
பெருமையுடன் காவடிக்குப்பூசை—யாரும்
பேணியே நடத்தியரகர வென்னுமோசை
விரிவாக அஷ்டதிக்கும் நிகழக்—குன்றை
வேலன்றன் காவடியுந்தோளின் மேற்றிகழ
திருவீதி நின்றுவிளையாடும்—அன்பின்
சிறப்பதனைப் பார்த்திட்ட பேர்க்கின்புநீடும்
சரவணபவா வென்றுசொல்வார்—மகிழ்ந்து
சத்திவடிவேலனே யென்றுவினை வெல்வார்
வேலுமயிலென்பார்கள் யாரும்—அதனை
விருப்பமுடன் கேட்பவர்க்கும் நன்மைபலசாரும்
நாலுவீதியுஞ் சுற்றிவந்தார்—சாமி
நாதனே துணையென்று பலமுறை நினைந்தார்
மலையினடிவாரத்தில் வந்தார்—அங்கே
வளர்தோகை யடிவிநாயகன் பதம் பணிந்தார்
மலிந்தவலி யிடும்பனாலயத்தில்—சென்று
வளமாகவேவந்து நினைத்திருதபத்தில்
நிலவுமம்மலையின் வளம்பலவும்—கூடி
நின்றங் கேகண்டார்கள் முடியுமோ சொலவும்
வளர்நாபி கமலன் முதல்வானோர்—நாளும்
வந்துகுகனடி வேண்டிநின் றிடுதலானோர்
தவமுனிவர் பலருமவணிருப்பார்—முருகன்
சரணாரவிந்தமே மனத்திடைத்தரிப்பார்
பவமகல அரகளிர்திரிவார்—கந்தன்
பாதத்திலநுதினம் பணிந்துமலர் சொரிவார்
கல்லெல்லாம் நவரத்னமாகும்—வளங்கள்
காணமுழுவது மென்றாலிவகுநாள்கள்போகும்
வில்லாளிய வேடர்மலிவார்—குகனை
விரும்பியே செல்வாரை யாதொன்றும் நலியார்

காடிமுதலிய துஷ்டஜெந்தும்—வேல்மயில்
காதினிற்கேட்டாலே வெகுதூரமுந்தும்
வருகங்கை யிறங்குவதுபோலும்—அந்த
மலையருவி யுச்சிநின்றிழியு மென்மேலும்
மாதர்களும் ஆடவருங்கூடி—முருகன்
மலரடிகள் தரிசிப்பார் கோடானுகோடி
ஓதுவரம் யாவையும் பெறுவார்—உள்ளத்
துவப்புடனே யெந்நாளும் இன்பெலாம் உறுவார்
சந்தனம் வில்வமரங் கோங்கும்—புன்னை
சண்பகங்கொன்றையா மலகமுடனேங்கும்
கந்தமலர் பூத்திட்டவேங்கை—நாவல்
காயாவு மருதமரம் பலநிலவுமாங்கே
இந்தவள மலைநின்றும் உச்சி—யடுக்க
இருக்கின்ற வீரவாகுபதம் உள்ளம் நச்சி
தந்தமனம் அன்புமிகக் கொண்டார்—அப்பால்
சார்கின்ற முருகன்றன் ஆலயத்தைக் கண்டார்
சுற்றெலாம் பசும்பொன்னாலியற்றி—திவ்ய
சுடர்விளங்கு மிரத்தினம் இடையிடையிற்குயிற்றி
மற்றெலாம் வயிரத்தூணிறுத்தி—மேலே
மாணிக்க உத்திரங்கள் வனப்பாக உறுத்தி
பாவுகல் சந்திரகாந்தத்தால்—அமைத்த
பாங்கெலாம் அணியாகப் பதித்துநித்திலத்தால்
மேவுமொளிகண் காணமுடியா—அந்த
வியன்றளியை யாவர்களும் வலம்வந்து நொடியாய்
சந்நிதியிற் காவடியைவைத்துச்—சிவ
சண்முகன்றிருவடியை யுள்ளம் பதித்து
நன்மையாய் வணங்கியே புகழ்ந்து—சாமி
நாதனுக் கபிஷேகஞ்செய வுள்ளமகிழ்ந்து
சண்முகன் முத்திரையை எடுத்துச்—சமஸ்த
சாமான்கள் யாவையும் நிமிஷத்திற்கொடுத்து

அண்மையாய்த் தெரிசனஞ்செய்தார்கள்—முருகன்
அருமையாந்திருமேனி கண்டுகளித்தார்கள்
திருவுருவ நிலைமையலங்காரம்—சிறிது
தெரிந்தயவரை சொல்லவே போமகங்காரம்
மருவு திருமுடிகளோராறும்—ஐந்து
வகையுருவ மாகின்ற மகுடவொளியேறும்
செவிகளின் மகரகுண்டலங்கள்—முகத்தைச்
சேர்ந்திருத்தல் இந்துவுடன் மீனொளிபோலிலங்க
திவியவொளி ஆறுதிருமுகத்தில்—ஒன்று
திசையெங்கும் விரிகின்ற கிரணத்தையுகைக்க
ஒருமுகம் அன்பர்தமைக் காக்க—மற்றை
யொருமுக முனிவர்களின் யாகத்தைநோக்க
ஒருமுகம் எஞ்சுபொருள்நாட—இன்னும்
ஒருமுகம் அசுரர்களைவேள் வீதிதனில் நீட
ஒருமுகம் வள்ளியொடுமகிழ—இதற்கு
ஒப்பவேபன்னிரு கரத்தில்முறை நிகழ
ஒருகரம் இருடியரைக்காக்க—இணைந்த
ஒருகரம் இடைதனில் அழகாக ஏற்க
ஒருகரத்தில் அங்குசமும் நடக்க—இணைந்த
ஒருகரந் துடையின்மேல் நன்றாகக்கிடக்க
இருகரம் பரிசைவேல் மலிய—ஏற்ற
இருகரங்கள் மார்பிலும் தாரிலும்பொலிய
ஒருகரந் தொடியொடிசைவாக—நல்ல
ஒருகரந் தன்னின்மணி யோசையினிதாக
ஒருகரம் மழைபெய்யும்வணமும்—மற்றை
ஒருகரம் அரமகளிர்தங்களின் மணமும்
இத்தகைய அற்புதக்கரங்கள்—ஒர்பன்
னிரண்டிலும் எழில்மிருந்த ஆபரணதாரங்கள்
மெத்தவொளிர் கண்டசரமின்ன—மிக்க
வியன்மார்பி லுலகான பதங்கள்துன்ன்

திருவடியிற் றண்டைசெறி சதங்கை—யோடு
திகழ்நீலமயிலின்மேல் வீற்றிருப்பதங்கே
பொருகடலிற் சூரியன்றனுதயம்—போலப்
புகல்கின்ற திருமேனி யன்பார்ந்த இதயம்
தனில்வைத்துத் தரிசனமும்பெற்று—குருக்கள்
தந்திடும் விபூதிபிரசாதமும் உற்று
தனையொக்கு முருகனருள்செழிக்க—வந்து
சார்ந்தார்கள் தங்கள்நகர் நலமெலாந்தழைக்க
வாழியைங் கரன்வாழிவாழி—எங்கள்
மயின்மலையிற் சண்முகன் பாதமலர்வாழி
வாழிசிவன் வாழியுமைவாழி—நாளும்
மறைவாழிதேவர்களு முனிவர்களும்வாழி
வாழிமிக நகரத்தார்வாழி—யுலகின்
மன்னுமனோர்களும் வாழிகுருவாழி
வாழியிந்நூல் சொன்னோனென்றும்—வாழி
மழைபெய்யு மேகங்க ளெந்நாளும்வாழி.

எச்சரிக்கை.

(மற்றுப்பற்றன—பண் மெட்டு)

சீரு கந்தெழில் வீறு காண்மிகச்
சேரும் வெற்பெங்கும் வாசனை
தேரும் அன்பர்க்கு நேரும் பேரருள்
செய்தவா எச்ச ரிக்கை. (1)

அந்த மேவிய தந்தி மாமுகன்
அருமைச் சோதர வநாதனே
கந்த மேவுகடம்ப னேகதி
ரேசனே யெச்ச ரிக்கை. (2)

நந்தி யூர்சிவன் பால னேவள்ளி
நாயகிமகிழ் லோலனே
கொந்து லாவிய சோலை சூழ்குன்றைக்
குடிக்குகா எச்சரிக்கை. (3)

மந்த ரந்தனைப் பந்தினாலறைந்
தேபிளந்திட வைத்தவா
முந்து நாளவிதி யைச்சிறையிட்ட
முருகய்யா எச்சரிக்கை (4)

பூங்கமழ்புனம் நாடிவேட்டுவன்
போலுருக்கொண்டு சென்றுபின்
வேங்கை யாய்வளர்ந் தோங்கி நின்றருள்
வேலனே யெச்சரிக்கை. (5)

களப குங்கும முலைமடந்தைதெய்
வானை காதல்கொள் கந்தனே
துளப மால்மருகா வென்றன் துயர்
துடைத்தவா எச்சரிக்கை. (6)

வீர மேமிகு சூரரைக் கொன்று
விபுதர் தம்மிடி தீர்த்தவா
மாரன் மைத்துன னாவாமயில்
வாகனா எச்சரிக்கை. (7)

கொண்டல் தாவிய கிரியின் மேவிய
கோல மார்தண்ட பாணியே
தொண்டர் தம்முளங் கொண்டவாசுப்ர
மண்யனே யெச்சரிக்கை. (8)

ஞானமே விளை பூமி யேலோக
நாயகா அன்பர் தாயகா
பான லங்கொண்ட வொளிமீ னும்பிகை
பாலனே யெச்சரிக்கை. (9)

வேழ நாகங்கள் சூழ்தலந்தனில்
மெய்த்தெய்வம் நீயே கந்தையா
ஏழை பங்குறை யெந்தை யேஜெக
தீசனே யெச்சரிக்கை. (10)

திங்கள் தோறும்வந் தன்பர் போற்றிடத்
திகழ்குன் றைக்குடி வந்தவா
பங்கயஞ் செறி சரவ ணம்வரு
பாலனே யெச்சரிக்கை. (11)

யூக மேமிகும் யோக னேதவர்
மோக னேஉயர் தியாகனே
சாக ரந்தனைத் தூர்த்த வாசாமி
நாதனே யெச்சரிக்கை. (12)

வேத வேதியர் சூழ மேளங்கள்
மேலு மேலு மொலித்திடும்
ஆத வன்னென ஒளியுடன்வரும்
அப்பனே யெச்சரிக்கை. (13)

பெருமை தங்கிய ராமநாதனைப்
பேணிக் காக்குஞ் சடாக்ஷரா
தருமலிங்க நற்றமிழு கந்தருள்
சண்முகா எச்சரிக்கை. (14)

கட்டியம்.

ஸ்ரீ அகண்டபரி பூரணன், அற்புத விற்பனன்
சேவற் கொடியுடைத், தேவர்கள் தேவன்
நித்திய நிர்மலன், பத்தர்கள் சித்தன்
மூவர்க்கு மேலாம், முக்கணன் புதல்வன்
எவ்வுயிர் களுக்கும், ஏகனுய் நிற்போன்
அற்புத மேமிகும், அனந்த விநோதன்
கந்தன் சேந்தன், கடம்பன் காங்கேயன்
சிவநேத் ரோதயன், ஜீவகா ருண்யன்
ஆறுபடை வீடு, அடைந்தஎன் னையன்
பவநாச காரணன், தவநேச பூரணன்
ஆறுரு வாகியே, யோருரு வானோன்
அரிய ஜோதியாய், ஆகிய வப்பன்
குலவும் அன்பர்தம், குலமுழு தாண்டவன்
குறுமா முனிக்குப, தேசமே செய்குகன்
ஐங்கரக் கடவுள், அருமைச் சகோதரன்
திருநிறை தென்பரங், கிரியுறை வாசன்
செந்தின்மா நகர்வாழ், திரைகடற் கரையன்
அகிலாண்ட கோடி, பிர்மாண்ட நாயகன்
ஆதி மத்திய, அந்த ரகிதன்
தீன தயாபரன், திவ்விய சொரூபன்
வேதனைக் குட்டிமுன், வெஞ்சிறை வைத்தவன்
ஞானகிரு பாகரன், மோன தயாபரன்
ஆபத் பாந்தவன் அநாத ரக்ஷகன்
பாவலர் நாவலர்,,பங்கி னுறைந்தவன்
வள்ளி குஞ்சரிக்கு, வாய்த்த மணாளன்
கள்ளவிழ் கடப்பங், தாரணி கந்தன்
திருத்தணி காசலன், திகழ்வே ளூரன்
மருக்கமழ் சோலை, வளர்குன்றைக் குடியன்
கருணை கடாக்ஷ,வீக்ஷண மேலோன்
துஷ்ட நிக்கிரக, சிஷ்டபரி பாலனன்
கஷ்ட நிவாரணன், கலியுக வரதன்
கதிர்வேலா யுதக்கடவுள், இன்றையத் தினம்

இக்குன்றைக் குடியின்கண், அன்னக் கொடிகட்டி
அன்னதானம், சொர்னதானம்
வஸ்திரதானம், கோதானம்
பூதானம், கன்னிகாதானம்
முதலான முப்பத்திரண்டு அறங்களும் குறைவின்றி
நடப்பித்து அந்தா துந்துபி, அதிர்ந்து முழங்க
சந்தோஷ மதாய்த், தாள மேளங்கள்
தாரை பேரிகை, பூரி யெக்காளம்
வீரமாரி, கோரி நாகசுரம்
தம்பூர் பிட்டில், சாரங்கி சித்தார்
இன்புறு வீணையில், எழில்ஜல தாங்கம்
சங்கீத கூட்டம், சகலமும் ஆர்ப்ப
மங்கள மாக, மாதர்க ளாட
கொடிகுடை சுருட்டி, குஞ்சா முன்வா
பிடி டாலாக்கள், பெட்புறத் துலங்க
ஆவணம் வலம்வந், தனைவருந் துதிக்க
தேவர்கள் மாரிபோல், திருமலர் தூற்ற
ரத்னசிம்மாசனத்தில்—சிறப்புடனமர்ந்து—தீர்த்தப்பிரசாத
விபூதியுந்தந்து—சகலஜீவர்களையும்—ரக்ஷிக்கிறேமென்று
இதோளமுந்தருளி யிருக்கிறர்—வெகுபாராக்—எச்சரீக்கை.

வாரப்பதிகம்.

சீதப் புனல்கொன்றை திங்களைச் சூடிய செஞ்சடையோன்
காதிற் றிருமந் திரந்தனைச் சாற்றிய காங்கெயனே
வாதித்த சூரனை வேரற வாட்டிய வாதுயர்தீர்
ஆதித்த வாரம் வருவேன்குன் றைக்குடி யாண்டவனே. (1)

துங்கக் கரிமுகத் தூமணி சோதா ஞகியெழிற்
செங்கைக் கிசைந்த வடிவேல் விளங்குஞ் சிவகுமரா
விங்குற் றவரெனக் காருணை யன்றியிப் பூதலத்தில்
திங்கட் கிழமை வருவேன்குன் றைக்குடித் தேசிகனே. (2)

123006

புவ்வார்ந் தவர்தினம் போற்றக் கருணை புரிமுருகா
முன்வாதி தேவர்க்கு மேலாய் விளங்குமுத் துக்குமாரா
தவ்வான் மகிடன்கைச் சிக்கா திருக்கநின் னுள்தருவாய்
செவ்வாய்க் கிழமை வருவேன்குன் றைக்குடித் தேசிகனே. (3)
இதபங் கயத்திரு மேவிய செம்பொ னிணைப்பதமே
சதமென்று நம்பிய அன்பர்க்கு நற்கதி தந்தகந்தா
மதன்றனக் கன்புற்ற மைத்துன னேயான் வணங்கவுனைப்
புதன்கிழ மைக்கு வருவேன்குன் றைக்குடிப் புண்ணியனே. (4)
ஒயாரத் துடனடந் தேதிரி மாதர்க் குளமளித்துக்
கயாசத் தொழுதுனை யேத்தா வெனக்குங் கடைக்கணருள்
செயாரத் திருநறு நீபந் திகழுந் திரண்டபுயா
வியாழக் கிழமை வருவேன்குன் றைக்குடி வேலவனே. (5)
புள்ளிக் கலப மயில்வாக னுபுவி யோர்க்குவெண்ணீ
றள்ளிக் கொடுத்தவர் தீவினை மாற்றிய ஆண்டவநீ
யுள்ளக் கருணைவைத் தேயெளியேன்றுய ரோட்டிவைப்பாய்
வெள்ளிக் கிழமை வருவேன்குன் றைக்குடி வித்தகனே. (6)
பனிவாய்த் துவரிதழ் அவ்வைக்கு நாவற் பருவமுறுங்
கனியே கொடுத்துப் பரிகாசஞ் செய்கரு ணாகரனே
அனியாயர் பாற்சிக்கி நையாதுன் பொன்னடிக் காக்கிவைப்பாய்
சனிவாரத் தன்று வருவேன்குன் றைக்குடிச் சண்முகனே. (7)

மாதப்பதிகம்,

சத்திக்குச் சோதரன் றன்மரு காசம ரேபுரிந்து
வெற்றிக்கு வேல்கொண்ட வித்தக னேவிரி பூதலத்தோர்
நத்தித் துதிபுரி நாதாவுன் பொற்கழல் நான்பணியச்
சித்திரை மாதம் வருவேன்குன் றைக்குடித் தேசிகனே. (1)
அய்யா கடம்பணி யப்பாமுப் போதும் அமரர்துதி
மெய்யாவெண் ணீறக்கு மேனிய னேவிழி யாறிரண் டார்
துய்யா சிவசுப்ர மண்யாவென் றுன்பந் துடைத்தவனே
வைகாசி மாதம் வரு வேன்குன் றைக்குடி மாகந்தனே. (2)

கானிடை வேங்கை மரமாக வேநின்று காதலினாற்
கூனிக் கிழவ னெனவேடங் கொண்டு குறமகள்பால்
தேனிற் பிசைதினை மாவுண்ட வாவுனைச் சேவைசெய்ய
ஆனித்திங் கட்கு வருவேன்குன் றைக்குடிக் காதிபனே. (3)

வேடிக்கை யாய்முகங் காட்டிக்கை நீட்டி விழிமிரட்டி
ஆடித் திரிவிலை வேசியர் தம்மயக் கற்றுநினைப்
பாடிக்கொண் டாடிப் பணிவோர் திருவடி பற்றவைப்பாய்
ஆடித்திங் கட்கு வருவேன்குன் றைக்குடி யாண்டனே. (4)

பூவணி நீபந் திகழும் புயாபொற் கமலமலர்ச்
சேவடி நாடுமிந் நாயேன் றுயர்கெடச் செய்திடுவாய்
தாவணி சம்புவை மாவாக்கி னோன்றன யாவெனையாள்
ஆவணி மாதம் வருவேன் குன்றைக்குடி யாள்குகனே. (5)

மறக்கா துனைத்தினம் பாடிக்கொண் டாடிய மைந்தனைப்பாய்
பரக்காகம் போல்மயங் காதெனைக் காக்க மயிலுகந்து
வரக்கால மின்ன தெனவறி யேனென்முன் வந்துகந்தாள்
புரட்டாசி மாதம் வருவேன்குன் றைக்குடிப் புண்ணியனே (6)

உற்பனஞ் செய்விதி யைச்சிறை வைத்தவுன் போலொர்தெய்வம்
இப்புவி மீதிலெங் கும்மறி யேனெழி லார்முருகா
வெற்பினைச் செண்டிற் புடைத்த குகாமெல் லடிதொழநான்
ஐப்பசி மாதம் வருவேன்குன் றைக்குடி யாள்பவனே. (7)

சீர்த்தி மிகுஞ்செகத் தோர்க்குற்ற தீவினை தீர்த்தருளு
மூர்த்தி யுனக்கிணை யார்கும ராமுறை யோவென்மனப்
பூர்த்திசெய் தாட்கொள நன்னா ளிதுபுங்க வன்புதல்வா
கார்த்திகை மாதம் வருவேன்குன் றைக்குடிக் காங்கெயனே. (8)

பார்முழு தும்பணி மெய்ஞ்ஞான பண்டித னீயெனவே
சார்திரு மால்மரு காகும ராகுஞ் சரிகணவா
ஆர்துணை நீயன்றி யையாவை யாபுரி யாளரசே
மார்கழி மாதம் வருவேன்குன் றைக்குடி மன்னவனே. (9)

தெய்வர் தொழவுயர் தவமா மௌனவள்ளை செப்பிய நூல்
மெய்யென நம்பி னவனல வோரத்ன வேல்பிடித்த
கையுடை யாயுன் கழல்பணி யென்றனைக் காத்தருள்வாய்
தைமாதம் வந்து தொழுவேன்குன் றைக்குடிச் சண்முகனே (10)

காசிப புத்திர னாகிய சூரசங் காரகினைப்
பேசிடு வோர்பிழை பேர்த்தவ னேநற் பிறைமுடியன்
தேசிக னேநின் செழுந்தா மரையடி சிந்தைசெய்ய
மாசித்திங் கட்கு வருவேன்குன் றைக்குடி மன்னவனே. (11)

எங்கணு முள்ள வரைதோறுங் கோவி லெனக்கொள்குகா
பங்கயப் பொய்கை வருகும ராபன் னிருநயனா
சங்கரன் றன்றன யாகினை யேசரண் சார்ந்திடநான்
பங்குனி மாதம் வருவேன்குன் றைக்குடிப் பண்டிதனே. (12)

குமரேசர் பதிகம்.

சீராரு முலகினிற் செந்திமா நகரிலே
திருவார் சகுந்த வரையில்
தென்பரங் கிரியிலே திகழ்சோலை மலையிலே
சீலமிகு போரூரிலே
பேராரும் வேதநீ ரெதிர்சென்று நின்றே
பிறங்குதிரு வேரகத்தில்
பெருமைமிகு வேளூர் விராலிமலை தன்னிலே
பேசரிய சென்னி மலையில்
தீராத செல்வமுள ருறைசாமி மலையிலே
திகழ்திருத் தணிகை மலையில்
சிறப்பார் கடம்பமலை தன்னிலே பல்வளஞ்
சேர்சோண சயில மதிலே
யாராறு முகவனே சீதளமி குந்தபுன
லலைமோது சண்மு கநதிக்
கன்பனே யென்னையாள் முருகனே
தென்பழநி யப்பனே யருள்வேலனே. (1)

ஏராறு முகவனே யீராறு கையனே
யெளியனிடு முறைக ளுன்றன்
எழிலான பனிரண்டு செவியிலோர் செவிதனிலும்
ஏற்கவிலை யோவென்னையா
வாராரு மிளமுலை மடந்தைகுஞ் சரிவள்ளி
மாதிருவர் மேல்நோக்கமோ
வஞ்சமிகு சூரனொடு வாதாடி யேவென்று
வந்ததோராயாசமோ
பாராதி யெங்குமுளர் கொண்டாடு மருணகிரி
பாடன்மீதிற் கவனமோ
பண்டித னெனச்சொல்பெயர் கொண்டதால் நோயாளர்
பக்கநின் மனமுற்றதோ
நீரான வேணியன் பாலசே வற்கொடிகொள்
நீலக்கலாப மயிலோய்
நித்தனே மெய்ஞ்ஞானமுத்தனே தென்பழநி
நெடியவேல் முருகேசனே- (2)
ஆசையொடு நின்னையே பணியடியர் பிணியைநீ
ருக்கியே யாண்டமணியே
அம்பலந்தன்னிலே காளிமுன் னாகநின்
ருடினோனீன்ற மணியே
ஓசையொடு வேதத்தை யோதுதென் கூடல்வாழ்
உமைமடி யிலாடு மணியே
யுலகளந் தோனெனுங் கரியவரி மிக்கவன்
புறுமருக னான மணியே
தேசங்கள் யாவுமுளர் திங்களோ டும்வந்து
தெரிசிக்க வருளு மணியே
திருவான சரவணத் துருவாறு கொண்டுவரு
தெய்வமே சைவ மணியே
வாசக் கடப்பமலர் மார்பா பரங்கிரியில்
வந்தமர்ந் தோங்கு மணியே
மங்காத ஞானமணி யெங்கள்குல தெய்வமணி
வாசுப்ர மண்ய மணியே (3)
வானின்ற திங்கள்சடை சேரும்விடை யேறியருண்
மன்ருடி ஈன்ற பாலா

மாநிலந் தன்னிலே கயவருற வினைநம்பி
        மதியீன னாகி நாளும்
நானென் றகந்தையே குடிகொண்ட நாயேனை
        நன்மார்க்க நெறிகாட்டுவாய்
நாறுபுனு கோடுதிரு நீறுபுனை யீசனே
        நாகமுறை குமரேசனே
வேனிலி னிளம்பயி ரெனக்கவலை யுறுமேழை
        மிசைவாது செய்வ தழகோ
மேலோர்க ளிடர்கொய்த வேலாயு தாசத்தி
        மிக்கமகிழ் வுற்ற புதல்வா
தேனின்ற மொழியழகி மீனேறு நயனத்தி
        தேவகுஞ் சரிமணாளா
திண்பெரும் புயமிரண் டாலுடைய தீரனே
        தென்பரங் குன்றாரனே (4)

அலைகடலி னிடையிலே மாருதச் சுழலிலே
        யகப்பட்ட தோணி போல
அடல்வீறு கண்டீர வத்தினைக் கண்டபக
        டதுபோல வுளம்வ ருந்தி
மலைகின்ற வென்னைநீ வந்தாள்கொ ளாததென்
        வருமமோ விதுத ருமமோ
வாழையடி வாழையாய் நின்னடிமை யல்லவா
        வள்ளிக் குவாய்த்த கணவா
கலைதேறு குறுமுனிக் குபதேசனே திருக்
        கந்தனே காங்கேயனே
காகுத்த னுக்காசை மருகனே முருகனே
        கதிர்வேல் தரித்த கரனே
சிலைதாவு தளிமேவு சேந்தனே சாந்தனே
        தேவசே னாதி பதியே
திடசூர னோடுபோர் புரிவீர னேகருணை
        செய்யாறு முகதேவனே (5)

பவமென்ற மூட்டைதனை நீங்காது கைக்கொண்ட
        பாவையர்கள் மோகவாரிப்

பள்ளத்தில் வீழ்ந்துழலு மறிவிலா வென்னைநின்
 பாதத்தை நாடி நாளுந்
தவமிஞ்சு பெரியோர்கள் உறவதைச் கூட்டியே
 சன்மார்க்க நெறிகாட்டியே
தானென்ற ஆணவ மு நீக்கிமெய்ம்முத்தித்
 தனிப்பாதை கொண்டுவிடுவாய்
சிவனங் கரத்துற்ற மாங்கனிக் கம்பொற்
 சிலம்புகல கலவென்றிடத்
திருநடஞ் செய்யுமயின் மீதேறியே திரைகள்
 சேராழி சூழுமிந்தப்
புவனமென் டிக்கையொரு நொடியில்வல மாகவரு
 போகநா தாகருணைசெய்
பொழில்வளஞ் செறிபரங் கிரியிலுறை பண்டிதா
 போர்க்கோல வடிவேலனே. (6)

அய்யநீ வருகவென் னப்பநீ வருகவென்
 ணண்டவா வருக வருக
அறுமுகா வருகவீ ராறுகரா வருகநின்
 னடிமைமுன் வருக வருக
தெய்வானை மன்வருக ஐம்முகன் சேய்வருக
 சிறுவன்முன் வருக வருக
சீலநீ வருகசூர் காலநீ வருகவுமை
 செல்வநீ வருக வருக
மெய்யநீ வருகமுரு கையனீ வருகவென்
 வினைகொய்ய வருக வருக
வேலாயு தாவருக மால்மருக நீவருக
 விசாகநீ வருக வருக
தெய்வநீ வருகவுயர் தேவர்தே வாவருக
 சேந்தநீ வருக வருக
சித்ரமயில் மேல்வருக முத்தையனே வருக
 திருவருள்செய் திடவருகவே (7)

செகமெங்க ளும்முள்ள கவிஞர்பா மாலைபுனை
 திண்புயாசல விசாகா
திருவால வாயினிற் சமணரைக் கழுவேற்று
 தீர கெம் பீரனீயே
மகபதி புரந்தரன் றனதருமை மகளுக்கு
 வாய்த்தமண வாளனீயே
மலரயன் சிரமீதி லோங்கியே குட்டியருண்
 மயில்வா கனத்த னீயே
சிகரம் பிளந்திடப் பந்திரு லன்றைதந்த
 சிவசுப்ர மணிய னீயே

திரைகடலில் வேல்விட்டு முன்னாளில் வற்றச்செய்
　　ஜயவீர தீரனீயே
திகழரி தனக்குரிய மருகனே விண்டாதி
　　தேவர்சேனாதிபதிநீ
தென்பரங் கிரியினுயர் திண்பெருங் கோயில்வளர்
　　செஞ்சுடர்க் கதிர்வேலனே (8)

என்னநான் சொல்லுகினு முன்மன மிரங்கா
　　திருப்பதென்னிது வுமழகோ
எந்தவித மாகநீ சோதித்தபோதிலும்
　　எப்போது முன்னை மறவேன்
அன்னைநீ யெந்தைநீ குருவுநீ யெங்குலத்
　　தடிமைகொண் டவனுநீயே
ஆவினன் குடியனீ பழநியங் கிரியனீ
　　யலைகள்சேர் கடலூரனீ
சென்னிமலை வேளூர் கடம்பமலை வாசனீ
　　திருவேரகத்தனீயே
சிங்கார மேமிகும் போரூர னீவளஞ்
　　செறிதிருத் தணிகையனுநீ
கன்னலொடு சாலிவிளை கமுகா சலத்தனீ
　　களிகொள்கதிர் காமனீயே
காவேரியார் சாமிமலையனீ யென்மனக்
　　கவலைதீர் கந்தனீயே (9)

அக்குநீ றருமழ கானவுரு வீசனை
　　ஐங்கரன் றுணைவ வாவா
அரியபிர ணவமெந்தை யன்னைபாற் சொலமுழுதும்
　　ஆராய்ந்த வாநீ வாவா
மைக்கான கத்திலே தள்ளாடு கிழவனென
　　வழிநடந் தவனீ வாவா
மஞ்சாடு குழல்வள்ளி தந்ததேன் றினைமாவை
　　வாங்கியுண் டவனீ வாவா
குக்குடக் கொடிகொண்டு மஞ்சைமீ தேறிவரு
　　கோலக் குகாநீ வாவா
கோவர்த்த னந்தனைக் குடையாக்கி னோனெனுங்
　　கோபாலன் மருக வாவா
தெக்கணப் புலைமன் வாராது காத்துனது
　　சேவடி கொடுக்க வாவா
தீரகெம் பீரனே சூரசங் காரனே
　　தென்பரங் கிரிவேலனே. (10)

முற்றுப்பெற்றது.